

# ஆதித்ய ஹ்ருதயம்

(தமிழாக்கம்)

அருள்தமிழ் அண்ணல், பாவலர்
அருட்கவி ப. ஜானகிநாதன் எம்.ஏ., எம்.எட்.

அருள்தமிழ் அண்ணல், பாவலர்,
அருட்கவி ப. ஜானகிநாதன் எம்.ஏ.,எம்.எட்.
217(1),பிட்டாபுரத்தி அம்மன் கோவில் தெரு,
திருநெல்வேலி - 627 006.
தொலைபேசி: 0462-2330257

தேதி: 29.10.2003

# நூல் அறிமுகம்

இது வால்மீகி இராமாயணத்தின் ஒரு பகுதி. போர்க்களம். போரைப் பார்க்க தேவர்கள் கூடியிருக்கின்றனர். அவருள் ஒருவர் அகத்தியர். போரிடையே இராவணன் சிறிது இளைப்பாறுகிறான். அகத்தியர் இராமனைக் காண்கிறார். இராமா! என்றழைக்கிறார். கண்ட இராமன் முனிவரை வணங்குகிறான். இராமா, நீ வெற்றி பெற ஒரு எளிய வழியைக் கூறுகிறேன், கேட்பாயா என்று இந்நூலை அவனுக்கு உபதேசிக்கிறார். இந்நூலே 'ஆதித்ய ஹ்ருதயம்' எனப்படுகிறது. அகத்தியர் சொற்படி நடந்த இராமனும் வெற்றி பெற்றான்.

கதிர்க்கடவுளை உள்ளத்தில் கொண்டு ஏத்தி வழிபட்டால் இகபர நலன்கள் கிட்டும் எனவும், அடியவர்தம் இதயமே இறைவன் எழுந்தருளும் இடமெனவும் உணர்த்தவே இந்நூல் இப்பெயர் பெற்றது என்பர்.

இந்நூலை உளங்கொளக் கற்போர், வாழ்வில் எல்லா நலன்களையும் பெறுவர். கண்ணொளிக் குறைபாடுகள் நீங்கும். பகையின்றி வெற்றி பெறுவர் என்பது அகத்தியர் கூற்று. ஆன்றோர்களின் அனுபவமும் அதுவே. எனவே யாவரும் படித்துணர்ந்து, பயன்பெற வேண்டுகிறேன்.

நன்றி.

அன்பன்,
ப. ஜானகிநாதன்

**அகத்தியர் இராமனுக்கு அருளிய**

# ஆதித்ய ஹ்ருதயம்

(தமிழாக்கம்)

**காப்பு**

பேரொளி ஆதவன்மேல் பெட்பாரும் நூல்செய்யச்
சீரொளி நால்வாய! சிந்தைகொண்டேன் - பேரொளிக்
கற்றோரும் ஏற்பக் கனித்தமிழில் வாய்த்திடவுன்
நற்கடைக்கண் ஈவாய் நயந்து.

ஆதிநல் முதலே காக்கும்
அரும்பெரும் பெருமை சாலும்
பூதியென் படிவத் தோடு
பொன்னொளிர் வீரத் தோளும்
ஏதிலா அருளின் நோக்கும்
என்னுளம் போற்ற நின்றேன்
ஓதியென் வினையைத் தீய்த்துன்
ஒண்ணருள் புரிவாய் இன்னே.

(சுக்லாம் பரதரம் எனத் தொடங்கும் சமஸ்கிருத சுலோகத்தின் தமிழாக்கம் இது)

**நூல்**

1. பார்புகழ் அமரர் எல்லாம்
பரிவுடன் செருக்க ளத்தே
ஆர்ப்புடன் வந்து நிற்க
அவரிடைத் தலைவ ராக
ஏர்மிகு கும்ப யோனி
எழுந்தருள் செய்யத் தீவின்
சீர்மிகு மன்னன் தம்முன்
செருவிடை நிற்கக் கண்டான்.

2. கரியசெம் மலையை ஆங்கே
கருத்தினில் தாங்கி, மாலும்
அரியதோர் வெற்றி காண
அகத்திடை விரும்பிச் சென்று
அரிந்தம! என்ற ழைத்தே
அன்புடன் கூற லுற்றான்
பரியதை நரியாய்ச் செய்தோன்
பதமலர் உளங்கொண் டோனே.

3. செற்றரும் தடந்தோள் வீர!
செகமெலாம் வாழச் செய்வோய்!
உற்றரும் இராம! ஒன்று
உரைக்கின்றேன் உளத்தில் கொள்வாய்
அற்றமில் பகைவர் தம்மை
அழித்திடும் வழியொன் றிங்கே
பற்றுடன் உரைக்கின் றேன்யான்
பரிவுடன் கேட்பாய் நீயே.

4. ஊதியம் உயிர்க்கு நல்கும்
ஒப்பறு இந்நூல் என்றும்;
ஆதியாம் அனலி நூலால்
அரும்பகை அழியும், மேலும்
நீதியால் வென்றோர் தம்மை
நித்தலும் காத்து நிற்கும்
ஓதிட நன்மை யாவும்
உவப்புடன் ஈயும் இங்கே.

5. மங்களம் நல்கும் பாரில்
மாங்கல்யம் நீடு காக்கும்
பொங்கிய பாவ மெல்லாம்
புறத்துடன் போக்கி ; உள்ளம்
தங்கிய துயரம் துன்பம்
தாக்கியே அழிக்கும் ; அப்பால்
மங்கிடா துயிரைக் காக்கும்
மாண்புறு இந்நூல் ஆமே.

6. ஆதியில் கதிரைத் தாங்கி
ஆதவன் பெயரை மேவி
நீதியால் அருளை ஈய ;
நித்தலும் மண்ணோர் மற்றும்
ஓதிடா அரக்கர், என்றும்
உயர்ந்தவிண் ணோரும் யாரும்
ஓதியே வணங்கிப் போற்றும்
உத்தமன் சீர்தாள் போற்றி.

7. விண்ணவர் வியனார் தோற்றம்
வியந்திட ஏற்ற செய்யோன்;
பண்ணவர் போற்றி நிற்கும்
பாங்கினில் அழகில் மிக்கோன்;
எண்ணரும் ஒளியோன் என்றும்;
ஏத்தரும் சுரர்கள் மற்றும்
மண்ணுளோர், அசுரர், யாரும்
வளர்ந்திட வாழ்த்தும் காணே.

8. இத்தகு மேலோன் இங்கே
ஏத்தரும் பிரம்மம், ஈசன்
அத்தமில் அருளார் கந்தன்,
அந்நெடும் அரியாம், சோமன்
உத்தமக் கால தேவன்,
ஒப்பிலி இந்த்ரன், காலன்
நத்தரும் தேவர் எல்லாம்
நவிலரும் இவனே அன்றோ?

9. ஏத்தரும் தென்பு லத்தோர்,
எண்வசு மருத்து வர்கள்
காத்தருள் வருணன், வாயு
கனிவுவச் வினிநல் அக்னி
கூத்தனோ(டு) ஆறு காலம்,
கூறரும் செயல்சேர் ஆன்றோர்
மாத்தமில் இவனே யாவன்
மனத்திடை மறக்கல் ஆமோ?

10. சூரியன், ஸவிதா, பூஷா
சுபஸ்திமான், ஆதித் தன்னார்
ஆரியன் ககனாம், பானு;
அரியபொன் ஹிரண்ய ரேதா,
காரிறு பூரி, சத்ரு
கன்னொடு, எல்லை ஈயும்
பேரிளம் திவாக ரன்னென்,
பெயர்பல இவனுக் காமே.

11. எழுபசு பரியும், ஏழு
எழில்பரி கொண்டு மண்ணில்
பழுதிலாக் கதிரைத் தாங்கிப்
பார்நிறை இருளை ஓட்டி
எழுநல மங்க லத்தை
ஈந்துடன் தீமை யெல்லாம்
கழுவியே மீண்டும் ஆக்கும்
கதிரவன் இவனாம் இங்கே.

12. அண்டமதில் இரண்ய கர்ப்பன் ;
அடுத்தவர் தம்மை யெல்லாம்
பண்டுடன் காத்தே உள்ளம்
பாங்குடன் குளிரச் செய்வான் ;
எண்ணரும் நெருப்பைத் தம்முள்
ஏற்றுடன் தகிப்பான், நீப்பன் ;
பண்புடை அதிதி மைந்தன் ;
பனிகளை ஒளிமிக் கோனே.

13. காணரும் விண்ணின் வேந்தன்;
கருத்துடை மறைகள் நான்கின்
பேணரும் முடிவின் மிக்கோன் ;
பெருமழை தருவன், நண்பன் ;
மாணமில் தமஸ்கு ணத்தோன் ;
மண்மிகப் போற்றி நிற்கும்
ஏணவிந் தியமும் தாண்டி
எழில்வெளிப் பயணி ஆமே.

14. பொன்னன வண்ண மோடு
புகலரும் வெம்மை மேவி
மன்னுருள் வடிவம் கொண்டு
மாற்றலர் வெற்றி கொள்வான் ;
இன்புறும் பாராய், இப்பார்
இயற்றினன், தீமை வெல்வோன்,
அன்பினன் கவிஞன் என்றும்
அரும்புகழ் மிக்கோன் காணே.

15. தண்ணரும் உடுக்கள் போலும்
தாரகைத் தலைவன், என்றும்
மண்ணிதை நிலைக்கச் செய்யும்
மாணொளி ஒளிக்கும் மேலோன்,
எண்ணரும் ஆறீர் நாமம்
ஏற்றுடன் நம்மை யெல்லாம்
கண்ணெனக் காப்போன் அவன்றன்
கழலடி பணிந்தோம் வாழி!

16. குணதிசை மலையில் தோன்றும்
கொற்றவ குளிர்தாள் போற்றி
குணமிகு குடக்கில் துன்னும்
கூன்மலை மறைவோய் போற்றி
அணங்கொளிக் குலத்துக் கெல்லாம்
அருமொளி யானாய் போற்றி
உணர்மிகு எல்லோய் உன்றன்
உயர்மலிக் கழல்கள் போற்றி

17. வெற்றியே வடிவாய் மேவி
வெற்றியும் நலனும் ஈவாய் ;
நற்றரும் பரியை ஊர்வோய்
நாளுமெம் போற்றிப் பல்கால் ;
அற்றமில் ஞானி ஏத்தும்
ஆயிரம் கதிரோய் போற்றி ;
கற்றுணர் அதிதி மைந்த,
கதிரவ உன்தாள் போற்றி.

18. கண்டவர்க் கச்சம் நல்கும்
கடிதொரு தன்மை யோடு
எண்ணிட அரிய வீரம்
ஏற்றவிண் பயணி போற்றி ;
கண்குளிர் கமலத் தேவே
கழறினன் போற்றி மீண்டும் ;
மண்டலம் புகழ்மார்த் தாண்ட
மலரடி கோடி போற்றி.

19. கங்கையைச் சடையுள் வைத்தான்,
கரியமால், கமலன் என்நீ
பங்கமில் ஆதித் தன்னென்
பகலரு ஒளியோன் ஆனாய் ;
மங்கல உயிர்கள் எல்லாம்
மாற்றமில் தன்னுட் கொள்ளும்
பிங்கல உருத்ரன் என்னும்
பெட்பினைக் கொண்டோய் போற்றி.

20. இருளினை ஒழித்தே என்றும்
இனியதை முடிப்பாய் நீயே ;
பெருகுரு பனிக ளைவாய் ;
பெற்றமில் செறுநர்த் தேய்ப்பாய் ;
அருநன்றி கொன்றார் தம்மை
அழித்திடு வடிவங் கொண்டாய் ;
கருதிய கூறுங் காலக்
கணிதருள் கோவே போற்றி.

21. காய்ச்சிய பொற்கு ழம்பாய்
கதிரொளி பரப்பும் நீயே ;
காயிருள் கடிவோய் நீயே ;
கனிவுடன் உலகத் தோர்கள்
ஆய்தரு செயல்கள் ஆற்றும்
அற்புத நெருப்பும் நீயே ;
மாய்ந்திடாக் காட்சி, சாட்சி
வடிவின உன்தாள் போற்றி.

22. எஞ்சிடாப் பூதப் பாரை
இயற்றியும் மறைத்தும் நிற்பான் ;
கொஞ்சமும் எஞ்ச லின்றிக்
கொள்ளுவான் ஒளியால் நீரை ;
நெஞ்சமும் அஞ்சும் வெப்பம்
நீளுல களிப்பான், வானில்
மஞ்சென நின்று நீரை
மழையெனப் பொழிவான் இங்கே.

23. ஏத்தரும் உயிர்கள் எல்லாம்
இரவினில் மஞ்சங் கொள்ளக்
காத்தருள் விழிப்பாய்ச் செய்வாய்
கனிந்தவுள் ளகத்தே நின்று,
மேத்தியம் செய்யும் வேள்வி
மிகுகனி உடன்செய் வார்க்குச்
சேத்திய மாக நின்று
செய்குவன் பயனை மிக்கே.

24. நான்மறை, வேள்வி யாக
நற்பயன் அவைகட் காற்றி
ஆன்நிறை உலக மெல்லாம்
அறிந்தருள் பெறவும் மிக்க
வான்மிகு உலகம் ஆற்றும்
வளர்பெரும் இயக்கம் எல்லாம்
தானென அமைந்து சாட்சி
பூதமாய் ஆவான் நின்றே.

25. என்னரும் இராம! பாரோர்
இன்னலுற் றயர்ந்த போதும்
மின்னென ஆபத் துக்கள்
மிகுபயம் அச்சம் மேவ
மன்னமிந் நூலை அன்பாய்
மனத்திடை பயில்வ ராயின்
துன்னரும் யாவும் நீங்கித்
துணிவுடன் வாழ்வர் தாமே.

26. பாரினைப் பாங்காய் ஆளும்
பகலவன் கமலத் தாளை
ஆரிரும் ஒருமை யோடு
அகந்தனில் கொண்டே ஏத்திச்
சீர்மிகு இந்த நூலைச்
செகமிதில் நாளும் ஓதின்
மூரிரும் வெற்றி கொள்வர்
முற்றிலும் உண்மை தானே.

27. வடதிசைத் தாழ்வு நீங்க
வந்தருள் சுரந்தான் இங்கே
கடனெனப் பன்னூல் யாத்துக்
கனித்தமிழ்க் களித்த வள்ளல்
திடமுடன் மாலை நோக்கித்
தென்னிலங் கைக்கோ தன்னை
அடல்மிக அழிப்பாய் என்றே
அருளினான் ; விடையுங் கொண்டான்.

28. ஏதிலா முனிவன் ஆங்கே
இயம்பிய வாய்மை குன்றா
ஆதித்த இதய மென்னும்
அறமுறை நூலைக் கேட்ட
தாதியாற் காட டைந்த
தசரத குமரன், தாமன்
ஊதியம் என்ன உன்னி
உள்ளுறுக் களிகொண் டானே.

29. எல்லினை உணர்ந்த மாலும்
எழுகென விடையும் தந்தே
அல்லலை ஒழிக்க ஆங்கே
அகத்திடை எண்ணி நன்னீர்
ஒல்லையில் இரண்டோ டொன்றை
உறுமுறை அங்கை கொண்டு
மல்லரும் வாய்ம டுத்தான்
வாய்மையால் மகிழ்கொண் டானே.

30. கடல்மலி இலங்கை வேந்தன்
காய்சினம் கொண்டு நிற்றல்
அடல்மலி இராமன் கண்டான்
அகமகிழ் வடைந்தான், இற்றே
கடனிவண் முடிப்பன் என்றே
களம்புகு வேடம் மேவித்
திடமுறும் எண்ணம் தாங்கித்
திண்ணியன் ஆனான் ஆங்கே.

31. அஞ்சிடும் களத்தைக் காண
அமரரும் அங்கு கூட
எஞ்சிடா வெய்யோன் தானும்
இராவணன் விதியை ஓர்ந்து
மஞ்சென நின்ற மாலை
மகிழ்வுடன் அழைத்து வாழ்த்தி
நஞ்செனும் அரக்கர் கோனை
நனிதுநீ முடியென் றானே.

## வேறு

சீராரும் உலகமதன் செய்ய கதிர்த்தேவே
ஏராரும் பார்புகழும் எழில்நா யகனே
விண்ணவர் போற்றியேத்தும் வியனார் தண்ணமுதே,
எண்ணரும் வேதாந்த இன்முடிவாய்த் தானமைந்த
மங்கள வடிவே, மற்றதனை ஈபவனே,
எங்ஙனும் மெய்ஞ்ஞான எழிலுருவாய் நிறைந்தவனே,
அமரர்தம் நாயகனே, ஆருலகம் போற்றுபுகழ்
தமக்கெதிர் இல்லாத தக்கோனே, நிர்மலனே,
உலகத்தே இன்பமதை உன்னி உளமகிழும்
அலகில் அமர, அவர் தலைவ, ஆதித்த
கற்றோர்கள் போற்றிமகிழ் கவிஞான ஆரியனே,
சீற்றம் பலமேவும் சீர்நர நாயகனே,
மூன்று உலகமும் முயன்றாலும் காணரிய
ஆன்றதூ ழாமணியே, அம்பிரமப் பெருவாழ்வே,
மூத்த சிவமென முடிவில்லாப் பல்வடிவாய்
நீத்தல் இன்றி நிமலவுளம் கொண்டவனே,
ஓங்குபெருந் தேருருட்டி உலகத்தை ஆள்பவனே,
ஈங்குன் அருமலர்த்தாள் என்றென்றும் உளத்தமைத்துத்
தீங்கின்று யாம்வாழத் தேர்ந்துன்றன் அடியிணையை
நீங்காது கைகூப்பி நித்தலுனை வாழ்த்துதுமே.
ஐயனே பானுதேவ! அரியகதிர்ப் பாஸ்கரனே!
உய்ய வழிகாட்டும் உத்தமனே மார்த்தாண்ட!
வெய்ய கதிர்க்கரத்தால் வியனுலகை ஆள்பவனே!
ஐயம் சிறிதின்றி ஆயுளையும் நலத்தினையும்
சையம் எனநிதியம் சார்ந்தபிற வளத்தினையும்
தொய்ய நன்மக்கள் தூவுலகில் யாம்பெறவே
மெய்ய! எமக்கருள்வாய் மேதினியில் இனிதுறவே.

முற்றிற்று.